
# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :29 January 2026

கோட்டை:8 வாயில்:29 ஜனவரி 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long,
Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college
Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

---

**நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்**

**இதழாக்கம்**

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

**முதன்மை ஆசிரியர்**

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


---

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


தமிழ்

# அலைகுடிகளின் அறவாழ்வு

# *Welfare of the nomads*

**கொ.சாந்தி,** முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதிநேரம்) (Ref.No.: **BDU2010632778656**)

தமிழாய்வுத் துறை, கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர் - 639 006

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

**முனைவர் சி.அழகர்**

இணைப் பேராசிரியர் - தலைவர், ஆய்வு நெறியாளர், தமிழாய்வுத் துறை,

கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கரூர் - 639 006

(பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது)

***K. Shanthi,*** *Research Scholar (Part Time) (Ref.No.:* ***BDU2010632778656****)*

*Department of Tamil, Kongu Arts and Science College, Karur - 639 006*

*(Affiliated to Bharathidasan University)*

*ORCiD ID: https:orcid.org//0009-0001-7646-6654*

***Dr. S. Alagar****, Associate Professor and Head, Research Supervisor,*

*Department of Tamil, Kongu Arts and Science College, Karur - 639 006*

*(Affiliated to Bharathidasan University)*

***Abstract***

*Although the period of Sangam literature was a land-owning society, the nomads who lived there as landless lived virtuously in that society. This article seeks to explore that auspiciousness. Sociological approach, Analytical approach, Historical approach are the approaches to be investigated. In the Sangam period, in a society where the virtues were recognized, the Panars lived by insisting on chastity in the society. The leader involved in internal life has been the bridge of connection in the external life of the leader. They have made it clear that the leader in the household should live with morality by being the one who resolves disputes and creates unity. In addition to social work, they have also been able to guide the ethnic groups.*

***Keywords:*** *Chastity-encouraging chastity, chastity-relieving work, comforting virtue, soldiers' final rites.*

**ஆய்வுச் சுருக்கம்**

சங்க இலக்கிய காலம் நிலவுடைமைச் சமூகம் என்றாலும் அதில் நிலமற்றவர்களாக வாழ்ந்த அலைகுடிகள் அச் சமூகத்தில் அறத்தோடு வாழ்ந்துள்ளனர். அவ் அறவாழ்வு பற்றி இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. சமூகவியல் அணுகுமுறை, பகுப்பாய்வு அணுகுமுறை, வரலாற்று அணுகுமுறை ஆகிய அணுகுமுறைகள் கொண்டு ஆராயப்படுகிறது. சங்க காலம் பரத்தமை அங்கிகாரம் பெற்ற சமூகத்தில் பாணர்கள் கற்பை சமூகத்திற்கு வலியுறுத்தி வாழ்ந்துள்ளனர். அகவாழ்வில் ஈடுபட்ட தலைவன் தலைவியின் இல்வாழ்வில் இணைப்புப் பாலமாக இருந்துள்ளனர். ஊடல் தீர்த்து ஒற்றுமை ஏற்படுத்துபவர்களாக இருந்து இல்லறத்தில் தலைவன் அறநெறியோடு வாழ வேண்டும் என்பதை உணர்த்தியுள்ளனர். சமூகப்பணி மட்டுமல்லாமல்தன் சார்ந்த இனக்குழுக்களுக்கு வழிகாட்டும் பண்பு கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர்.புற வாழ்வில் மரணமடைந்த வீரர்களுக்கு பாட்டுப் பாடி இறுதிக்கடன் செலுத்தியுள்ளனர்.இதன் மூலம் சங்க காலத்தில் பாணர்கள் அற நெறியில் வாழ்ந்துள்ளதை அறியமுடிகிறது.

**திறவுச்சொற்கள்:** கற்பை வலியுறுத்தும் பாணர், ஊடலைத் தணிக்கும் பணி, ஆற்றுப்படுத்தும் அறப்பண்பு, வீரர்களின் இறுதிக் கடனில் பாணர் பணி

**முன்னுரை**

சங்க இலக்கிய காலங்களில் உடைமை வர்க்க சமூகமும், உழைக்கும் வர்க்க சமூகமும் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதனுடன் உடைமை அற்றவர்களாக கலைகளைத் தன்வசம் வைத்து அனைத்து நிலங்களிலும் அலைகுடியாக இருந்துள்ள பாண் சமூகத்தினர் மற்றும் பலர் இருந்துள்ளனர். உடைமை அற்றவர்களாகவும் நிலை இல்லாத குடியினராகவும் இருந்தாலும் அவர்களுக்கென்று வாழ்வில் கட்டமைப்பு வைத்து அற வாழ்வு வாழ்ந்துள்ளனர். அவ் அற வாழ்வியலை இக்கட்டுரை ஆராய்கிறது.

**கற்பை வலியுறுத்தும் பாணர்**

கடல் கோள் கொண்ட தமிழ் சமூகத்தை நெறிப்படுத்த ஒரு சமூகம் இருந்துள்ளது. அதனை தொல்காப்பியர் தன் இலக்கண நூலில் பதிவு செய்துள்ளார். கற்புகால வாழ்க்கையில் பாணரை கூற்றுக்கு உடையவராக காணமுடிகிறது.

“நற்றாய் கண்டோர் பாணன் கூத்தர்
விறலி பரத்தை அறிவாரன் றெழுவரும்
அறுவாரன் றவரும் ஆகிய அனைவரும்
குறைவறு கற்பிற் கூற்றிற் குறிய” [அக நூ.எ:214]

தமிழர்களின் அக வாழ்வில் பாண் சமூகத்தினர் மிக முக்கியப்பங்கு வகித்ததோடு அவர்களை அறவழியில் வாழ வலியுறுத்தியுள்ளனர். நிலைகுடியினர் வாழ்வோடு ஒன்றி வாழ்ந்துள்ளனர். கற்பு வாழ்க்கை என்றாலும், களவு வாழ்க்கை என்றாலும் பாணரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்துள்ளது. தலைவன் தலைவியின் வாழ்வில் கற்பு நெறியை வலுப்படுத்தும் கருவிகளாக அலைகுடி சமூகத்தினர் இருந்துள்ளனர்

**பாண் சமூகத்தாரின் நடுவுநிலைமை**

பண்டைய சமூகமும், சங்க இலக்கியங்களும் அலைகுடியினரான பாண் சமூகத்தாரைப் பன்முகத் தன்மையில் பதிவு செய்திருந்தாலும் பெரும்பான்மையான இடங்களில் அவர்களின் வாழ்வு அறவழி சார்ந்ததாகவே இருந்தது.

“இந்நிலை வாரார் ஆயுள் தந்நிலை
எவன் கொல்? பாண! உரைத்திசிற் சிறிதெனக்
கடவுட் கற்பின் மடவோள் கூறச்
செய்வினை அழிந்த மையல் நெஞ்இல்
துளிகொள் பருவரல் தீர வந்தோய்
இனிது செய் தனையால் வாழ்கநின் கண்

[அகம்:314:13-18]

பாண் சமூகத்தினரைப் பரத்தை சமூகத்தாராலும், தலைவி,தோழி ஆகியோராலும் பழிக்கப்பட்டாலும், பாணர்களின் நடுவுநிலைமைத் தன்மை சங்க இலக்கியங்களில் பதிவாகியுள்ளன. பாணர்களை பொய்யன் என்றும் ,சூழ்ச்சிக்காரன் என்றும் பழித்தாலும் எல்லாம் வெற்றுக் கோபத்தால் உருவான சொற்களே என்பது வெளிப்படுகிறது. பாணர்கள் தலைவன், தலைவிக்கு இடையில் நேர்மையுடன் நடந்து கொண்டுள்ளனர். அதனோடு பாணர்கள் நடுவு நிலைமையோடு நடந்து கொண்டுள்ளதை அகப்பாடலும் பதிவு செய்துள்ளது. வினை மேற்சென்ற தலைவன் தான் கூறிச்சென்ற பருவத்துள் மீண்டு வரவில்லை ஏன் என்று பாணனிடம் தோழி கேட்கிறாள்.

பின் வரவினைக் கண்டு துன்பத்திலிருந்து தலைவி விடுபடுகிறாள்.அதனால் நீ வாழ்வாயாக என்று பாராட்டுகிறாள். இதிலிருந்து பாணனின் கடமையுணர்வும் அவனின் நடுவு நிலைமையும் வெளிப்படுகிறது. தலைவன், தலைவியின் அக வாழ்வில் நடுவு நிலைமையுடன் நம்பிக்கைக்குரியவர்களாகவும் பாணர் சமூகத்தினர் இருந்துள்ளதை அறியமுடிகிறது.

**வாயிலளாகப் பணியாற்றும் பாண் சமூகத்தினர்**

தலைமகளின் ஊடலைத்தீர்க்கின்ற வாயில்களுள் முதலாவதாக கூறப்படுபவர் பாணர். இவர்கள் வாயில்களாக விடுக்கப்படும் காலங்களில் செய்ய வேண்டிய செயல்களை அகப்பொருள் இலக்கணம் வகுத்துள்ளது.

“வாயில் வேண்டாம் வாயில்நேர் வந்தாலும்
சேயிலை ஊடல் தீர்த்தலும் போயுழி
அவணலந் தொலைவுகள் டழுங்லும் அவன வுயிற்
சொல்லிய கூற்றெனச் சொல்லுங் கிழவோன்
வரவு மீண்டுவந் தாவைக் குணர்த்தலும்
அணிநலம் பெற்றமை யறியாள் போறவட்
பணிவொடு வினாதலும் பாணற் குறிய”

[அகம்:நூ.எ.95]

தலைவன் பொருட்டுப் தலைவியிடம் வயில் வேண்டுதலும், வாயில் நேர்வித்தலும், தலைவியின் ஊடலைத் தீர்த்தலும், தலைவியின் நலந்திலைவு கண்டு அழுங்குதலும், தலைவனிடத்துச் சொல்லுதலும் சென்று தலைவனுக்குத் தலைவியின் நிலைமையை எடுத்துரைத்தலும், தலைவன் வரவைத் தலைவிக்கு மீண்டு வந்து தெரிவித்தல் என்பன போன்ற செயல்கள் பாணர்களுக்கு உரியன எனக் கூறப்பட்டுள்ளது. சங்க இலக்கியத்தில் தலைவன் வரவை தலைவிக்கு உரைத்ததும் தலைவி பாணனுக்கு சிறப்பு செய்வதைக் காணமுடிகிறது.

“நீ கண்டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினும் மொழிமோ
வெண்கோட்டு யானை சோணை படியும்
யார் வாய்க் கேட்டாணை காதலர் வரவே”

[குறு.75]

பிரிவில் இருந்த தலைவன், தலைவியைப் பார்க்க வருகிறான் என்ற செய்தியைப் பாணன் தலைவிக்கு உரைக்கிறான்.செய்திக் கேட்ட தலைவி மகிழ்ச்சியில் “பாணனே தலைவியின் வரவை நீ கண்டாயோ அல்லது கண்டவர்கள் உனக்கு உரைத்தார்களோ தெளிவாகச் சொன்னால் பொன்வளம் மலிந்த நகரத்தை நீயும் உனக்குச் சொன்னவரு ம்பெற்று இன்புருவீர்களென்று தலைவி கூறியுள்ளாள். தலைவனோடுற்ற உறவில் இருந்தவர்கள் பாணர்கள் மட்டுமல்ல விறலியர்களும் அவர்களோடு உறவில் இருந்துள்ளனர். தலைவன் பரத்தையிடம் மீண்டு தலைவிடம் செல்வதற்கு விறலி வாயில் சென்றதை நற்றினை 170வது

பாடல் பதிவுசெய்துள்ளது. தலைவன், தலைவிக்கு இடையில் நட்பை ஏற்படுத்த வாயில்களாக இருந்து அவர்களின் வாழ்வில் அன்பு தழைத்தோங்க பாண் சமூகத்தினர் பணி ஆற்றியுள்ளதை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**ஊடலைத் தணிக்கும் பணி**

சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவியருள் ஏற்படும் ஊடலைத் தணிப்பதற்கு எண்ணற்றவர்கள் வாயில்களாக விளங்கியுள்ளனர்.அவர்களுள் பாணர், கூத்தர், விறலியர், பாடினி போன்றோரும் உளர். தலைவன் பரத்தமையிற் பிரிந்த நேரத்தில் தலைவி ஊடல் கொள்வாள். பின் மீண்டும் தலைவியைக் காண வேண்டித் தலைவன் தன் இல்லம் வரும்போது பாணரை வாயிலாக அனுபுவானென்று கூறப்படுகிறது.

"கொளைவல் பாணர் பாடினி கூத்தர்

……………………………………………

யென்றிவை ஊடல்

மருந்தாய் தீர்க்கும் வாயில்கள் ஆகும்"

தலைவனுக்கு ஊடல் தீர்க்கும் வாயில்களாகப் பாணர், பாடினி, கூத்தர் போன்றோர் விளங்குவதைக் காணமுடிகிறது.

"பாண் மரபினருள் ஒருவரான கூத்தருக்குரிய செயல்களாகச் செல்வத்தை வாழ்த்துதலும், நல்லறிவு எடுத்துரைத்தலும்,கவலை உரைத்தலும்,காம நுகர்வு எடுத்துரைதலும் சேய்மை செப்பலும், பாசறை மேற்சென்று உரைத்தலும் மீண்டு வரும் வரவு உண்ர்த்தப்படுவது போன்றன கூறப்படுகின்றன. [ஜோ.லட்சுமி, சா.கா.சமூக அமைப்பில் பாணர்கள் ப.52]

**தலைவனை அறநெறிப்படுத்தல்**

அக வழ்வில் தலைவன் தலைவியை நெறிப்படுத்துவதில் அதிக பங்கு பாணர்களுக்கு உண்டு. தலைவனின் பிரிவைத் தாங்காமல் துன்பத்தில் துவலும் நிலை கண்டு பாணன் காணப் பொருக்காமல் தலைவனிடம் சென்று உரிமையுடன் கேட்கும் நிலையை ஐங்குறுநூறு பாடல் பதிவு செய்கிறது.

" நிகைகியாம் பாணரும் அல்லேம் எமக்கு

நீயும் குருசிலை யல்லை மாதோ

நின்வெங் காதலி தன்மானைப் புலம்பி

ஈரிதல் உண்கண் உகுத்த

பூசல் கேட்டும் அருளா தோயே"

பாணன் தலைவனிடம் சென்று "உன்னையே நினைத்து உயிர் போகும் நிலையில் இருக்கும் தலைவியை நினைத்துப் பார்"எனக் கூறுகிறாள். அதற்கு அருள் தருமாறு எந்த இசைவும் இல்லாததைக் கண்டு பாணன் கோபம் கொண்டு இனி இந்த தூது தொழிலினை கைவிட்டேம் என்பதோடு நினக்கு யாம் பாணாரேம் அல்லேம் எங்கிறான். தலைவனையே விரைந்து மீண்டு வரும்படி தன் செயலில் காட்டியுள்ளான். தலைவனின் உறவு முறியாமல் ஆற்றொழுக்காக நெறிப்படுத்திய பாங்கை இப்பாடல் வழி காணமுடிகிறது.

**ஆற்றுப்படுத்தும் அறப்பண்பு**

உயிர்களில் மிகச் சிறந்த உயிர் மனித உயிர்.ஏனென்றால் மனித உயிர் மட்டுமே அடுத்த சக மனிதர்களுக்கு ஆற்றுப்படுத்தும் பண்பை கொண்டுள்ளான். அச்சிறப்பை மனிதக் கூட்டங்களில் பாணர் கூட்டமே அப்பண்பை பெற்றுள்ளது .அதற்கான சான்றுகள் சங்க இலக்கியங்கள் நமக்கு தருகின்றன. "ஆற்றுப்படுத்தல் என்பதே ஒருவன் இன்னொருவனுக்கு வழிகாட்டுதல் என்பதாகும். அவ்வாறு பரிசில் பெற்று வரும் பாணர், பரிசில் பெற இருக்கும் பாணருக்கு வழிகாட்டுவதும், பரிசில் பெற்ற பாணரிடம் பெற நினைக்கும் பாணர் கூட்டம் விசாரிப்பதும் ஆற்றுப்படுத்துதல் என்று வழங்கப்படுகிறது." (சங்க கால சமூக அமைப்பில் பாணர்களின் மரபும் நீட்சியும்"-சே.பி. லட்சுமி)

யான்வாழும் நாளும் பண்ணன்
பாணர் காண்சிவன் கடுப்பினது இடும்பை
யாணர்ப் பழுமரம் புள் இமிழ்ந் தன்ன
ஊணொலி அரவந் தானும் கேட்கும்
பொய்யா எழிலி பெய்விடம் நோக்கி
முட்டை கொண்டு வற்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும் கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும் தெற்றெனப்
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணிந்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே"

[பறம்:173]

பரிசில் பெற்று வந்த பாணனிடம் பெறாத பாணர் கேட்பதாக இப்பாடல் பதிவாகி உள்ளது. பசியும் வழிநடை வருத்தமும் வாட்டுகின்றன.அவை தெளியப் பசி நோய் தீர்க்கும்

மருத்துவரின் இல்லம் பக்கமோ, தூரமோ உங்களைக் கேட்கிறோம் சொல்லுங்கள். இவ்வாறு ஏட்கப் பரிசில் பெற்று வருபவன் "பண்ணன் வீட்டைக் காட்டி" என் வாழ் நாளையும் கூடப் பெற்று வாழ்வானாக என்று வாழ்த்திச் செல்கிறாள்.பரிசில் பெற்று வரும் பாண் கூட்டத்தைக் கண்டு கேட்போரையும் ஆற்றுப்படுத்தியுள்ளனர். சிலவேளைகளில் பரிசில் பெற்றவர், பரிசில் பெறாதவரைக் கண்டு ஆற்றுப்படுத்துவது உண்டு. இதன் மூலம் ஆற்றுப்படுத்தும் பண்பு பாணர்களுக்கு இயல்பாகவே இருந்துள்ளதை அறியமுடிகிறது.

**வீரர்களின் இறுதிக் கடனில் பாணர் பணி**

பாண் சமூகத்தினர் அலைகுடிகளாக இருந்தாலும் நிலைகுடிகளின் பணிகளைச் செய்துள்ளனர். பாணர்கள் போர் பாசறையில் இருந்துள்ளனர். போர் பாசறைக்கு பரிசில் வாங்கவும் சென்றுள்ளனர்.அங்கு பாணர்கள் போர்களத்தில் விழுப்புண் பட்டு உயிர் துறந்தவர்களுக்கு இறுதிக் கடன் செய்த நிகழ்வுகளை புறத்திணைப்பாடல்கள் பதிவு செய்கின்றன.

போர்களத்தில் வீர மரணம் அடைந்தவர்களைப் புகழ்ந்து பாடியதோடு அவர்களுக்கு இறுதிக்கடங்களைச் செய்யும் தொண்டுள்ளம் கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர்.

"வெள்கோட்ட களிறுஎறிந்து செங்களத்து வீழ்ந்தார்க்குக்
கைவல்யாழ்ப் பாணர்கடன் இறுத்தன்று "

[புறப்.தும்பை.123]

போர்க்களத்தில் பகைவரின் யானையைக் கொன்று தாமும் இறந்து வீழ்ந்த தும்பை வீரர்களுக்குச் செய்ய வேண்டிய இறுதிக்கடனைச் செய்து அவர்களுடையப் புகழைப் பாடியுள்ளனர்.

**முடிவுரை**

சங்க இலக்கிய கால கட்டத்தில் நிலைகுடிகளின் வாழ்வில் கற்பு வாழ்க்கை என்றாலும், களவு வாழ்க்கை என்றாலும் பாணர்களின் பங்களிப்பு இருந்துள்ளது. தலைவன், தலைவியை அறநெறிப்படுத்தியுள்ளனர். தலைவன், தலைவியின் அக வாழ்வில் பாணர்கள் நடுவுநிலைமை கொண்டவர்களாகவும் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் இருந்துள்ளனர். தலைவன், தலைவிக்கு இடையில் ஊடல் ஏற்படும் போது ஊடல் தீர்க்கும் வாயில்களாகவும் நின்று தலைவனை ஆற்றுப்படுத்தும் பண்பு கொண்டவர்களாகவும் இருந்துள்ளனர்.

பாணர்கள் சமூகத்தில் அறப்பண்பு மிகுந்தவர்களாகவும் இருந்துள்ளனர். தான் பரிசு பெற்ற மன்னனிடம் பசியுடன் வரும் பாணனை ஆற்றுப்படுத்தும் பண்பு கொண்டவர்களாக

இருந்துள்ளனர். அடுத்தவர்களின் தேவைகளை உணர்ந்து பூர்த்தி செய்யும் பண்பை இயல்பாக உடையவர்களாக இருந்துள்ளனர். பாணர்கள் இசையை ஆளுபவர்களாக மட்டுமல்லாமல் வீரர்களின் இறுதி கடன் நிகழ்வுகளில் பாணர்கள் பங்களிப்பு இருந்துள்ளதை அறிய முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1.அகத்திணை நூற்பா.எண்.214

2.அகநானூறு.பா.314

3.அகப்பொருள். நூ.எ.95

4.குறுந்தொகை.பா.75

5.ஐங்குறுநூறு ,பா.480

6.புறநானூறு.பா.173

7.புறப்பொருள் வெண்பாமாலை,தும்பை திணை.123

8.புறநானூறு.பா.173

9.புறப்பொருள் வெண்பாமாலை,தும்பை திணை.123

**துணைநூற் பட்டியல்**


[1] இளம்பூரணனார் (உ.ஆ.). *தொல்காப்பியம், பொருளதிகாரம்.* கழக வெளியீடு, சாரதா பதிப்பகம் சென்னை.

[2] கமலா முருகன் (உ.ஆ.). *பத்துப்பாட்டு, பொருநராற்றுப்படை.* சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2003.

[3] சரவணன், ப. (உ.ஆ.). மலைபடுகடாம். தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

[4] சரவணன், ப. (உ.ஆ.). *மதுரைக்காஞ்சி.* தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, முதற்பதிப்பு - 2022.

[5] சரவணன், ப. (உ.ஆ.). *மலைபடுகடாம்.* தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, முதற்பதிப்பு - 2022.

[6] தமிழண்ணல், ந.மீனவன் (உ.ஆ.). *சங்க இலக்கியம், தொகுதி 9, அகநானூறு (மூன்றாம் பகுதி).* வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2004.

[7] தாண்டவராய முதலியார் (ப.ஆ.), *திவாகர நிகண்டு.* வேதவிநாயகர் அச்சகம், சென்னை.

[8] துரைசாமிப்பிள்ளை, ஔவை சு. (உ.ஆ.). *பதிற்றுப்பத்து.* சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு, சென்னை, 5 ஆம் பதிப்பு - 1968.

[9] நாராயணசாமி ஐயர், பின்னத்தூர் (உ.ஆ.). *நற்றிணை.* கழக வெளியீடு, சென்னை, 2 ஆம் பதிப்பு - 2001.

[10] பக்தவத்சல பாரதி. *தமிழகத்தில் நாடோடிகள்.* புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.

[11] பக்தவத்சல பாரதி. *இலக்கிய மானிடவியல்.* அடையாளம் பதிப்பகம், சென்னை, 2014.

[12] பாலசுப்பிரமணியன், கு.வெ., பரிமணம், அ.மா. (உ.ஆ.). *சங்க இலக்கியம், புறநானூறு-1 மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 6 ஆம் பதிப்பு - 2017.

[13] முருகன், இரா. (உ.ஆ.). *சிறுபாணாற்றுப்படை, செவ்வியல் நூல்கள் உரைவரிசை: பத்துப்பாட்டு.* தமிழ் வளர்ச்சித் துறை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, முதற்பதிப்பு - 2022.

***References***

[1] Ilampooranar (Ed.). *Tholkappiyam, Porulathikaram.* Kazhaga Veliyeedu, Saratha Pathippagam, Chennai.

[2] Kamala Murugan (Ed.). *Pathupaattu, Porunatrupadai.* Saratha Pathippagam, Chennai, First Edition - 2003.

[3] Saravanan, P. (Ed.). *Malaipadukadam.* Tamilnadu Paadanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai.

[4] Saravanan, P. (Ed.). *Maduraikanji.* Tamil Valarchi Thurai, Tamilnadu Padanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai, First Edition - 2022.

[5] Saravanan, P. (Ed.). *Malaipadukadam.* Tamil Valarchi Thurai, Tamilnadu Padanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai, First Edition - 2022.

[6] Silambaraj, K. "Sirupanatrupadaiyil Alaikudikalin Idappeyarvu." *Keetru, Ungal Noolagam,* September 2024. www.keetru.com

[7] Tamilannan, N.Meenavan (Ed.). *Sanga Ilakkiyam, Volume 9, Aganaooru (Third Part).* Varthamanan Pathippgam, Chennai, First Edition - 2004.

[8] Thandavaraya Mudaliyar (Ed.). Thivagara Nigandu, Vedavinayagar Achagam, Chennai.

[9] Duraisamipillai, Avvai Su. (Ed.). *Patripatthu.* Saiva Siddhantha Noorpathippu Kazhaga Veliyeedu, Chennai, Fifth Edition - 1968.

[10] Nanthini, P. "Sangakala Alaikudikalana Paanar-Koothar Oppeedu." *Aran International e-Journal of Tamil Research*, Volume 7, 26 April 2025, pp.38-42. ISSN: 2582-399X.

[11] Nanthini, P. "Vedathaari Palangudiyinar Ennum Isaiporunan." *Manarkeni Aaivuveli*. Volume 1, Issue 2, Ithzh 70, October 2024, pp.46-53. ISSN: 2249-9164.

[12] Narayanasami Iyer, Pinnathoor (Ed.). *Natrinai*. Kazhaga Veliyeedu, Chennai, Second Edition - 2001.

[13] Bakthavatchala Bharathi. Tamilagathil Nadodigal. Puducherry Mozhiyiyal Panpattu Aaraichi Niruvanam, Puducherry.

[14] Bakthavatchala Bharathi. *Ilakkiya Manidaviyal*. Adayalam Pathippagam, Chennai, 2014.

[15] Balasubramaniam, K.Ve., Parimanam, A.M. (Ed.). *Sanga Ilakkiyam Purananooru-1 Moolamum Uraiyum*. New Century Book House (P) Ltd., Chennai, Sixth Edition - 2017.

[16] Mageshwaran, C. "Tamilnattu Alaikudi Makkal." *Keetru, Ungal Noolagam*, February 2022. www.keetru.com

[17] Murugan, R. (Ed.). *Sirupanatrupadai, Sevviyal Noolkal Uraivarisai: Pathupaattu*. Tamil Valarchi Thurai, Tamilnadu Paadanool Matrum Kalviyiyal Panigal Kazhagam, Chennai, First Edition - 2022.

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, ஏப்ரல் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஏப்ரல் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஏப்ரல் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com